सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

**யாழ்ப்பாணம்**

**ஊடக அறிக்கை**

**சங்கர் சர்வதேச ஓவியப் போட்டி**

யாழ். இந்தியத் துணைத் தூதரகமானது, வடக்கு மாகாண கல்வியமைச்சின் அனுசரணையுடன் முதன்முறையாக சங்கர் சர்வதேச ஓவியப் போட்டியினை, வடக்கு மாகாண மாணவர்கள் பங்கு பெறும் வகையில் சனிக்கிழமை 14 நவம்பர் 2015 அன்று நடாத்தியது. வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் இருந்து ஏறக்குறைய 750 மாணவர்கள் அந்தந்த மாவட்டகளிலுமுள்ள நிலையங்களில் பங்குபற்றியிருந்தனர். யாழ்ப்பாணத்தில் இந்நிகழ்வு வேம்படி மகளிர் கல்லூரியில் நடாத்தப்பட்டது. இந்தியாவின் முதலாவது பிரதமர் பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்களுடைய பிறந்த தினமும் 14 நவம்பர் அன்று வருவது ஓர் சிறப்பம்சமாகும். இந்த ஓவியப் போட்டி ஆரம்ப வைபவத்திற்கு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் கௌரவ சீ.வீ.கே.சிவஞானம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

மறைந்த பிரபல கேலிச்சித்திர ஓவியரான கே. சங்கர்பிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஓவியப் போட்டியானது 1949ம் ஆண்டிலிருந்து சர்வதேசரீதியில் நடைபெற்று வருகின்றது. கடந்த வருடம் 130 நாடுகளிலிருந்து அண்ணளவாக 1,60,000 மாணவர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் பங்கு கொள்வதற்கு எந்தவித நுழைவுக்கட்டணமும் இல்லை. போட்டிக்கான சித்திரங்கள் மாணவர்களின் விருப்பப்படியே தாங்கள் விரும்பிய கருப்பொருளை அடிப்படையாக கொண்டது.

சங்கர் சர்வதேச ஓவியப் போட்டி முடிவுகள் செப்ரெம்பர் 2016 அளவில் புதுடில்லியிலிருந்து வெளியாகும். அனைத்து ஓவியங்களும் நடுவர் சபையினரால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே போட்டி முடிவுகள் வெளியாகும்.

இந்த வருடத்திலிருந்து இப்போட்டிகளை வடக்கு மாகாணத்தில் ஒவ்வொரு வருடமும் நடாத்த யாழ். இந்தியத் துணைத்தூதரகம் உத்தேசித்துள்ளது.

*14 நவம்பர், 2015*